பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
09 12 2025 12 40
செவ்வாய்க்கிழமை நண்பகல்

**தலைப்புச் செய்திகள்**

- தேர்தல் சீர்திருத்தம் தொடர்பான விவாதம் மக்களவையில் தற்போது நடைபெற்று வருகிறது.

- நாட்டின் வளர்ச்சிக்காக தேசிய ஜனநாயக கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் மேலும் உத்வேகத்துடன் செயல்பட வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

- இண்டிகோ நிறுவனத்தின் விமான சேவைகள் தற்போது சீரடைந்து வருவதாக சிவில் விமானப் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

- பங்களாதேஷ் நீதிமன்றம் தமக்கு எதிராக அளித்துள்ள தீர்ப்பு, அரசியல் உள்நோக்கம் கொண்டது என்று அந்நாட்டின் முன்னாள் பிரதமர் திருமதி ஷேக் ஹசீனா குற்றம் சாட்டியுள்ளார்.

- தாய்லாந்து பாரா சைக்ளிங் போட்டியில் இந்தியா 2 வெள்ளி, 9 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தேர்தல் சீர்திருத்தம் தொடர்பான விவாதம் மக்களவையில் தற்போது நடைபெற்று வருகிறது.

காங்கிரஸ் கட்சியை சேர்ந்த திரு. மணீஷ் திவாரி இந்த விவாதத்தை தொடங்கி வைத்து உரையாற்றி வருகிறார்.

இந்த விவாதத்தின் முடிவில் மத்திய சட்டத்துறை இணையமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மெக்வால் பதிலளிக்க உள்ளார்.

<<<<>>>>

நாட்டின் வளர்ச்சிக்காக தேசிய ஜனநாயக கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் மேலும் உத்வேகத்துடன் செயல்பட வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற தேசிய ஜனநாயக கூட்டணிக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு இதனைத் தெரிவித்தார்.

மக்களின் வாழ்க்கையை எளிதாக்கி அவர்களுக்கு எவ்வித சிரமும் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்யும் வகையில் அனைத்து துறைகளிலும் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் பிரதமர் அறிவுறுத்தியதாக அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் இளையோருடன் எப்போதும் தொடர்பில் இருக்குமாறும் பிரதமர் கேட்டுக்கொண்டதாக திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

முன்னதாக கூட்டத்தின் தொடக்கத்தில், பீஹார் தேர்தல் வெற்றிக்காக கூட்டணிக் கட்சிகள் சார்பில் பிரதமருக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

<<<>>>>

இண்டிகோ நிறுவனத்தின் விமான சேவைகள் தற்போது சீரடைந்து வருவதாக சிவில் விமானப் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்திற்குப் பின்னர் இதனைத் தெரிவித்த அவர், விமானங்கள் ரத்து செய்யப்பட்டதால் பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு கட்டணத் தொகை முழுமையாக திருப்பி அளிக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

பயணிகளின் உடைமைகளும் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

விமானப் போக்குவரத்து துறையில் இந்தியா வேகமாக வளர்ச்சி கண்டு வருவதாகவும், வரும் காலத்தில் உள்நாட்டு விமானப் போக்குவரத்தில் அதிக முதலீட்டுக்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் திரு. ராம்மோகன் நாயுடு கூறினார்.

<<<>>>>

காங்கிரஸ் நாடாளுமன்ற குழு தலைவர் திருமதி சோனியா காந்தியின் பிறந்தநாளையொட்டி பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், திருமதி சோனியா காந்தி நல்ல உடல் ஆரோக்கியத்துடன் நீண்ட காலம் வாழ வாழ்த்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், திருமதி சோனியா காந்தியின் தன்னலமற்ற பொதுவாழ்வுப் பயணம் அனைவருக்குமான இந்தியாவை நோக்கிய கூட்டு முயற்சிகளை வலுப்படுத்தும் என்று கூறியுள்ளார்.

<<<<>>>>

முன்னேற்றத்திற்கு பெரும் தடையாக ஊழல் உள்ளதாக ஐ.நா. பொதுச்செயலாளர் திரு. ஆண்டனியோ குட்டெரெஸ் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினத்தையொட்டி அவர் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில், இளையோரின் கனவு மற்றும் நம்பிக்கையை பாதிக்கும் வகையில் ஊழல் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இளையோருக்கான சிறந்த எதிர்காலத்திற்காக ஊழல் இல்லாத உலகை உருவாக்க வேண்டும் என்றும், அனைவரும் இதற்கு பொறுப்பேற்க வேண்டும் என்றும் திரு. ஆண்டனியோ குட்டரெஸ் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

உடல் பருமன் பிரச்சினைக்கு தீர்வு காண மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

ஹரியானாவின் பஞ்ச்குலாவில் நடைபெற்று வரும் சர்வதேச அறிவியல் திருவிழாவின் குழு விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய அவர், தகுதியற்ற மருத்துவர்கள் மற்றும் உணவுக் கலை நிபுணர்கள் இப்பிரச்சினையை மோசமாக்கி விட்டதாக அவர் குற்றம் சாட்டினார்.

போலியான உணவுக்கலை நிபுணர்கள் தவறான தகவல்களைக் கூறி பாதிப்புகளை அதிகரிக்கச் செய்துவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உடல் பருமன் பிரச்சினை, உடல் அழகு சார்ந்தது மட்டுமல்ல என்று கூறிய திரு. ஜிதேந்திர சிங், இப்பிரச்சினையை அறிவியல் ரீதியாக கையாள வேண்டியது அவசியம் என்றும் தெரிவித்தார்.

<<<<>>>>

*கேரளாவில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் இன்று நடைபெற்று வருகிறது.*

*முதற்கட்டமாக திருவனந்தபுரம் உள்ளிட்ட 7 மாவட்டங்களில் அடங்கிய 595 கிராமப்புற மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு இன்று வாக்குப்பதிவு நடைபெறுகிறது.*

*3 மாநகராட்சிகள், 39 நகராட்சிகள் மற்றும் 471 கிராமப் பஞ்சாயத்துகள், 75 ஊராட்சி ஒன்றியங்கள், 7 மாவட்ட ஊராட்சிகளுக்கான பிரதிநிதிகள் இத்தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர்.*

*மத்திய இணையமைச்சர் திரு. சுரேஷ் கோபி திருவனந்தபுரத்தில் உள்ள வாக்குச்சாவடியில் வாக்களித்தார்.*

*நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சஷிதரூர், மாநில பிஜேபி தலைவர் திரு. ராஜீவ் சந்திரசேகர், சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவத் திரு. சதீஷன் உள்ளிட்டோரும் இத்தேர்தலில் வாக்களித்தனர்.*

*எஞ்சியுள்ள மாவட்டங்களில் இரண்டாம் கட்டமாக நாளை மறுநாள் வாக்குப்பதிவு நடைபெறுகிறது.*

*இரண்டு கட்டங்களிலும் பதிவாகும் வாக்கு எண்ணிக்கை வரும் 13ஆம் தேதி மேற்கொள்ளப்படும்.*

*<<<<>>>>*

*பங்களாதேஷ் நீதிமன்றம் தமக்கு எதிராக அளித்துள்ள தீர்ப்பு ஒருதலைப்பட்சமானது, அரசியல் உள்நோக்கம் கொண்டது என்று அந்நாட்டின் முன்னாள் பிரதமர் திருமதி ஷேக் ஹசீனா தெரிவித்துள்ளார்.*

*மின்னஞ்சல் வாயிலாக அவர் அளித்துள்ள ஒரு பேட்டியில், மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத சுயநல அரசியல்வாதிகள், பங்களாதேஷின் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி, அரசியல் எதிரிகளை முடக்க முயற்சிப்பதாக குற்றம் சாட்டியுள்ளார்.*

*இத்தகைய அரசியல்வாதிகள் தங்களது சுய லாபத்திற்காக நீதிமன்றங்களை பயன்படுத்துவதாகவும் அவர் கூறியுள்ளார்.*

*தமக்கு நெருக்கடி ஏற்பட்டபோது அண்டை நாடான இந்தியாவும், பிரதமர் திரு. நரேந்திர மோடியும் அளித்த ஆதரவுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாகவும் திருமதி ஷேக் ஹசீனா கூறியுள்ளார்.*

*<<<<>>>>*

*கடற்படை வீரர்கள் தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கு ஏற்ப ஆயத்தமாக இருக்க வேண்டும் என்று கடற்படையின் கிழக்குப் பிராந்திய தளபதி வைஸ் அட்மிரல் சஞ்சய் பல்வா வலியுறுத்தியுள்ளார்.*

*தமிழகத்தின் ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் INS ராஜாளி கடற்படை விமான தளத்தில் ஹெலிகாப்டர் பைலட் பயிற்சியை நிறைவு செய்த வீரர்களிடையே பேசிய அவர், நவீன போர் உத்திகளை வீரர்கள் அறிந்துகொள்வது அவசியம் என்றார்.*

*நவீன ரேடார்கள் மற்றும் நீர்மூழ்கி கப்பல்களை பயன்படுத்துவதற்கான பயிற்சி அரக்கோணத்தில் வழங்கப்பட்டு வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.*

*முன்னதாக வீரர்களின் பயிற்சி நிறைவு அணிவகுப்பையும் அவர் பார்வையிட்டார்.*

*பயிற்சி காலத்தில் சிறப்பாக செயல்பட்ட வீரர்களுக்கு கோப்பைகள் மற்றும் பரிசுகளையும் வைஸ் அட்மிரல் சஞ்சய் பல்வா வழங்கினார்.*

<<<>>>>

*தாய்லாந்து பாரா சைக்ளிங் போட்டியில் இந்தியா 2 வெள்ளி, 9 வெண்கலப் பதக்கங்களை வென்றது.*

*Korat-ல் நடைபெற்ற இப்போட்டியில் Lisha Dass 2 வெள்ளிப் பதக்கங்களை வென்றார்.*

*விஷ்வா 4 வெண்கலப் பதக்கங்களையும், லிஷா 2 வெண்கலப் பதக்கங்களையும், பவன், யோகேஷ், பிரஷாந்த் தலா ஒரு வெண்கலப் பதக்கங்களை வென்றனர்.*

<<<>>>>

*ஒடிசா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி இன்று கட்டாக்கில் தொடங்குகிறது.*

<<<>>>>